★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 5563

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 15உ திங்கள் (28—5—56) ★ ★ வெளியூர்: வைகாசி 16உ செவ்வாய் (29—5—56) [இதழ் 296

சிறைக் கைதிகளின் ஆக்கப்பணி!

இலட்சுமணபுரி, மே 25—

உத்திரப் பிரதேச சிறைகளிலுள்ள சுமார் 8,000 கைதிகளை, 3 முன்னேற்றத் திட்டங்களில் மாநில அரசினர் ஈடுபடுத்தியுள்ளனராம். அவர்களுக்குச் சம்பளமும் தரப்படுகிறதாம்; அவர்கள் சுதந்திரத் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர் எனத் தெரிய வருகிறது

பிலிபிட் மாவட்டத்தில் ஷாபாக் என்ற இடத்தில் 1,500 கைதிகள் ஒரு கால்வாய் வெட்டி வருகின்றனராம். சராசரித்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசர் தூற்றலைத் துவங்கிவிட்டார்

திராவிட நாடு எல்லை-ஆட்சிமுறைபற்றி அறிவிக்கவில்லையாம்!

வரி விதிக்காமல் ஆட்சி செய்வார்களா?

கோயில் சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிடுவார்களே!

வியாபாரிகளை ஏய்க்கவே ஒருமுக விற்பனை வரியை ஆதரிக்கிறார்கள்

பேச்சுரிமையை துஷ்பிரயோகம் செய்கிறார்களே!

திருச்சி மாநாட்டுத் தீர்மானம், எதிர்பார்த்ததிலும் கூடுதலாக வேலை செய்யத் துவங்கிவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்துகொண்டால் ஆளும் கட்சியான காங்கிரசின் கதி என்னாகுமோ என்ற அச்சம், முதலமைச்சர் காமராசர் அவர்களை சித்தசுவாதீனமற்றவராக ஆக்கிவிட்டிருக்கிறது. சாதாரண காலத்திலேயே அறிவுப் பெட்டகமாக விளங்கிவந்த அவர், புத்தி தடுமாறத் தொடங்கியதும், சன்னி கண்டவர்போல் முன்பின் தொடர்பின்றி பிதற்றத் தொடங்கிவிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்துகொள்ள முடிவு கட்டியிருப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, அம்முடிவை அவர் வரவேற்றார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரு பிரச்சினையாகக் கொண்டு தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென தி. மு. கழகம் உணரத் தவறிவிட்டதற்கு, அவர் வருத்தம் தெரிவித்தார்.

"காங்கிரஸ் கொள்கைகளையும், நடைமுறைகளையும் மேலெழுந்த வாரியாகக் குறை கூறுவதில் எவருக்கும் பயனேற்படாது.

"எதிர்க் கட்சிகளையும், அதன் பலத்தையும் சாதாரண மக்கள் நன்கறிந்திருக்கின்றனர்.

"நாட்டுப் பிரிவினையைத் தொடர்ந்து ஏற்பட்ட அவலங்களை நாட்டு மக்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

"திராவிட நாடு எல்லைப் பற்றியும், அதன் ஆட்சி அமைப்பு பற்றியும், எவரும் விளக்கிக் கூறவில்லை.

"வரி விதிக்காமல், திராவிட நாட்டை அவர்களால் ஆட்சி செய்ய முடியுமா?

"திருப்பதி, மதுரை, திருவரங்கம் முதலிய கோயில்களின் பொன்-வெள்ளி அணிகள், மக்கள் நலத்திற்காகப் பறிமுதல் செய்ய வேண்டும் என அவர்கள் கூறுகிறார்கள்.

"அந்தக் கோயில் நகைகள் எல்லாம் ரூ. 15-கோடிக்கே மதிப்புடையதென்றும், அத்தொகை மூன்று மாத சென்னை நிர்வாகச் செலவிற்குத்தான் போதுமானதாகும் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

"தி. மு. கழகத்திற்கு பொறுப்பு கிடையாது; சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ளவே எண்ணுகிறது.

"இப்பொழுது நடைமுறையில் உள்ள பல கட்ட விற்பனை வரிக்குப் பதிலாக ஒரு கட்ட விற்பனை வரி வேண்டுமென்று அவர்கள் (கழகம்) தீர்மானித்து இருப்பதற்குக் காரணமே, வியாபாரிகளை ஏமாற்றுவதற்கு ஆகும்.

"திராவிட நாடு தேவை என்று தீர்மானிப்பதற்குப் பதிலாக, அவர்கள் (கழகம்) காங்கிரஸ் அரசாங்கம் செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டி இருக்க வேண்டும். அதை வரவேற்று, தவறுகளைத் திருத்த முயற்சிக்க முடியும்.

"ஆக்கத்திற்கான குறை கூற வேண்டும்; அவர்கள் (கழகம்) அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பேச்சுரிமையை விஷமத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

"கரித்துண்டுகளால், அவர்கள் சுவர்களில் இழிவாக எழுதிவருகிறார்கள்.

"நமது பெண்கள் அதை வெறுக்கிறார்கள்; எனவே, அதற்குரிய பதிலை தேர்தலில் பெண்கள் அளித்தே தீருவர்.

"தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்வது கண்டு அச்சம் கொள்ளவில்லை; உண்மையில், அம்முடிவை, காங்கிரஸ் வரவேற்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

கொடுத்து வைத்தவர்!

திருமலைக் கோவில் சீனிவாசப் பெருமாளின் எப்ரல் சிங்கள் வருமானம் ரூ. 2 21,036-1-0 இந்திய நாணயங்களாகவும், ரூ. 2,450-14-0 ஐதராபாத் நாணயங்களாகவும் இருந்ததாம்! இதைத் தவிர பொன், வெள்ளி ஆகிய அணிமணிகளின் விலை மதிப்பிடவில்லையாம்.

உ. பி. மாநில மந்திரிகள் பெறும் அளவுக்கு மீறிய சலுகைகள்

மக்கள் சபையில் தகவல்

உத்தரப் பிரதேச மாநில மந்திரிகளுக்கு என்னென்னம் வசதிகள்—சலுகைகள் கிடைக்கின்றன தெரியுமா?

பெரோஸ் காந்தி என்ற உறுப்பினர்—உ. பி. காங்கிரசார்தான்—மக்கள் சபையில் கூறியிருக்கிறார்:-

உ. பி. மந்திரிகளுக்கு ரூ. 1,250 மாதச் சம்பளம் தரப்படுகிறது; இதற்கு வருமான வரி கிடையாது.

அத்துடன், ஒரு இலவசமான கார்; கார் ஓட்டி; இலவசமாகப் பெட்ரோல்; குடியிருக்கக் 'குளிர்பதனச் சாதனம்' பொருந்திய வீடு—கைனிடாலில் மற்றுமோர் வீடு—இலவசமாகக் குடியிருக்க!

இத்தனையும் தரப்படுகிறதாம்!

"மந்திரிகளுக்காக, வரிமுழுவதையும் சர்க்காரே தந்துவிடும் போது, வரி விதிப்பு உயர்த்தப்படுவதினால், மந்திரிகளை அது எவ்வகையிலும் பாதிக்காதே?" என்று, மக்கள் சபையில், அந்த உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

அப்போது, நிதி மந்திரி தேஷ்முக் அதற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"உ. பி. மாநில மந்திரிகளின் சம்பளச் சட்டம் பற்றி எனக்குத் தெரியாது. உறுப்பினர் கூறுவது உண்மையானால், நான் கூறக் கடியதெல்லாம், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகளில், அந்த மாநில சட்டசபையே இறுதி அதிகாரம் படைத்தவை—மத்திய சட்டசபையைப்போலவே.

"ஒரு மாநில சட்டசபை, அந்த மாநில மந்திரிகளின் சம்பளம் பற்றி ஒரு நிர்ணயத்திற்கு வந்திருப்பதில், அரசியல் சட்டப்படி நாம் குறுக்கிட முடியாது."

தலையிருக்க வால் ஆடுகிறது!

எசமானர் ஒப்புகிறார்—எடுபிடி இல்லை என்கிறார்

தென்னாடு புறக்கணிக்கப்பட்டது உண்மையே

பிரிட்டிஷார் காலத்திலேயே வட நாட்டிற்குச் சலுகை தரப்பட்டது

தொழில் துறை முன்னேற்றத்தில் தென்னாடு ஒதுக்கப்பட்டது குறித்து நேரு

புதுடில்லி, மே 26—

தென்னாட்டில் புதிய இரயில் பாதைகள் அமைக்க இரண்டாம் திட்டத்திலும்கூட ஏற்பாடுகள் இல்லை என்ற மைசூர் முதன் மந்திரியின் குற்றச்சாட்டிற்குப் பதில் அளிக்கும்போது மக்கள் சபையில் பிரதமர் நேரு, 'அந்தக் குற்றச்சாட்டு சரியானதே' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஏன் புதிய இரயில் பாதைகள் அமைக்கவில்லை யென்றால், எங்கே புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றனவோ, அங்குதான் அந்தத் தொழிற்சாலைகளின் தேவைக்காகப் புதிய இரயில் பாதைகளை அமைப்பது என்று முடிவு செய்துள்ளோம்; தென்னாட்டில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கவில்லை; அதனால், அங்கு புதிய இரயில் பாதைகளும் இல்லை என்று வாதிட்டிருக்கிறார், இந்தியப் பிரதமர்!

ஆனால், ஏன் புதிய தொழிற்சாலைகள் தென்னாட்டில் நிறுவப்படவில்லை என்பதற்கு அவர் காரணம் கூறவில்லை!

அவர் கூறியதாவது:—

"சில இடங்களில் இரயில் பாதைகள் போடப்படவிருக்கின்றன. இது, வடநாட்டிற்குச் சலுகை செய்வதாக ஆகாது.

"பிரிட்டிஷார் காலத்தில், இரயில்வேயைப் பொறுத்த

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை

அப்படிக் கூறுவது அர்த்தமற்றது

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி பதவிக் கூலி அழகேசன் அண்டப்புளுகு!

திருச்சி, மே 26—

டெல்லிக்கு தென்னாட்டிலிருந்து கிடைத்திருக்கும் புத்திசாலித்தனமான 'எடுபிடி'களுள் தானும் ஒருவர் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறார்—இங்கு, மத்திய சர்க்காரில் இரயில்வே இலாகா உதவி மந்திரியாக இருக்கும் ஓ. வி. அழகேசனார்—பக்த வத்சலத்தின் சகலை!

தென்னாட்டினை, வடநாடு—டெல்லி சர்க்கார் புறக்கணித்து விட்டது—அலட்சியம் செய்கிறது என்ற உண்மை, அவர் கண்களுக்கு 'அர்த்தமற்றதாகப்படுகிறது.

'மக்களே! படித்த இளைஞர்களே! இதுபோன்ற கோஷங்களுக்கு செவிமடுக்காதீர்' என்றும் அந்த உதவி மந்திரி இங்கே புலம்பியிருக்கிறார்.

தனது எசமானர்கள் தனக்கு வழங்கியிருக்கும் 'நற்கருணை'க்கு உதவி மந்திரி பதவிக்காகவேனும், அவர் இப்படிப் பேசித்தானாக வேண்டும் என்றுதான், மக்கள், அவர்மீது அனுதாபப்பட்டதாகத் தெரியவருகிறது.

"ஐந்தாண்டுத் திட்டம், பலமுனை முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டது. மத்திய சர்க்கார், தென்னாட்டிற்கு அந்தத் திட்டங்களில் [illegible] பங்கு தரவில்லை என்று அடிக்கடி குறைப்பட்டுக் கொள்கிறார்கள்; அது ஒரு அர்த்தமற்றக் கூச்சல். டெல்லியிலிருந்து பணம் தருவது என்ற விவகாரமல்ல,

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—5—'56 திங்கள்

காமராசர் பெருமூச்சு!

தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும் என, திரிசிரபுரம் மாநாட்டில் கூடிய பெருந்திரளான திராவிட மக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் திட்டவட்டமாக ஆணையிட்டனர். திராவிடப் பெருங்குடி மக்களின் ஆணை வழி இயங்கும் ஒரு விடுதலை இயக்கமாக, முன்னேற்றக் கழகம் இருந்துவருவதால், அக்கழகத்தின் உரிமையாளர்களான மாநாட்டில் கூடியிருந்த மக்களின் கோரிக்கையைச் சிரமேற்கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயத்திற்கு, கழகக் காவலர்கள் வரவேண்டியவர்களாயினர். அதிலிருந்து விலகிச் செல்வது என்பது கழகக் காவலர்களின் சக்திக்கு மீறிய செயலாகும். அதுவுமன்றி, மக்கள் முடிவை அலட்சியப்படுத்தி நடந்தனர் என்ற வீண் அபவாதத்திற்கும் கழகக் காவலர்கள் ஆளாக்கப்பட்டும் இருப்பர்.

தேர்தலில் கலந்து கொள்ளுவது என்ற முடிவை, கழகத்தின் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்க, அதற்குரிய உரிமையும், ஆற்றலும் கழகக் காவலர்களுக்கு இருந்த போதிலும் கூட, அவ்வகையில் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்ளுவதை அவர்கள் விரும்பவில்லை. மக்கள் ஏவியபடி தாமும் இயங்க முந்துவது என்ற அடிப்படை ஜனநாயக உணர்வுபடி, தேர்தலில் கலந்து கொள்வதில் முடிவு காணும் பொறுப்பை, மக்களிடமே விட்டுவிடும் சிறந்த போக்கை கழகக் காவலர்கள் மேற்கொண்டனர்.

கழகக் காவலர்கள் மாநாட்டில் மேற்கொண்ட செயல்முறை, ஜனநாயகக் கோட்பாட்டை இதுவரை இல்லாத வகையில், வெற்றிகரமாக செயலாற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு புதிய நடைமுறையாகும். இப்புதிய நடைமுறையை வேறு பல விவகாரங்களிலும் மக்கள் கருத்தறிய பயன்படுத்தப்படுமானால், கூடுமானவரை ஜனநாயகம் ஒழுங்காகவும், தெளிவாகவும் செயல்படுவதற்கு வகை செய்ததாகும். அதற்கான ஒரு முன்மாதிரியாக, மாநாட்டில் மேற்கொண்ட புதியமுறை அமைந்திருக்கிறது என்பது உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

திரிசிரபுரம் மாநாட்டில் மக்கள் தம்மிச்சையாகத் தந்தத் தீர்ப்புக் கொப்ப, கழகக் காவலர்கள், தேர்தலில் பங்கு கொள்வது என முடிவு கட்டினர். அம்முடிவையும் மாநாட்டினர் ஆதரித்து வரவேற்றனர். திரிசிரபுரம் மாநாட்டின் முடிவின் உள்ளடக்கம் இதுதான். இதற்கு மேல் அம்முடிவில் வேறு ஒரு இரகசியமும் கிடையாது.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் கலந்துகொள்ள இருக்கிறது என்ற முடிவை சீராக செயல்படுத்துவதற்கான எந்தவிதத் துவக்க நடவடிக்கையிலும் கழகக் காவலர்கள் இதுவரை ஈடுபடவில்லை. அது பற்றி எண்ணவாவது முனைந்திருக்கிறார்களா என்பதும் சந்தேகம்.

தேர்தலில் பங்கு கொள்ளுவது என்ற கழகத்தின் புதிய செயல் முறை தீர்மான வடிவில் ஏட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எதிர்பார்த்தபடியே, அம்முடிவு பற்றி பரபரப்பு நாட்டில் பரவலாக ஏற்பட்டு இருக்கிறது.

அப்புது முடிவு, சிலருக்கு எரிச்சலையும், சிலருக்கு ஏமாற்றத்தையும், சிலருக்கு சீற்றத்தையும், சிலருக்கு அழுக்காறையும் ஆளும் கட்சியை நடத்திச்செல்லும் பரம்பரை பாத்தியதை தமக்கே உரித்தானது என எண்ணிக்கிடக்கும் முதலமைச்சர் போன்றவருக்கு அச்சத்தையும், அதிர்ச்சியையும தந்திருக்கிறது. எனவே, அப்புது முடிவு குறித்து தம்தம் விருப்புக்கும் விவேகத்தின் அளவிற்கும் ஒப்ப கருத்தறிவித்துள்ளனர்.

மற்றவர் போலவே, முதலமைச்சர் காமராசர் அவர்களும், கழக முடிவு குறித்து கருத்தறிவித்துள்ளார் — இல்லை—குளறி வழிந்துள்ளார். அவரிடம் எவரும் அதைத்தானே எதிர்பார்க்க முடியும்?

தாம் வழக்கமாக என்றும் கூறிவருவதுபோன்றே சுதந்திர திராவிட நாடு சாத்தியமல்ல—விரும்பத்தக்கதல்ல என்று இப்பொழுதும் உரைத்துள்ளார்.

திராவிட நாடு உருவாவதை அவர் விரும்பவில்லை—எனவே அது சாத்தியமற்றது என்று அவர் முடிவு கட்டிவிடுகிறார்.

முதலமைச்சர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும, திராவிடப் பெருங்குடி மக்கள் விரும்பினால் திராவிட நாடு சாத்தியமானதே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மக்களின் ஒருமுகமான கோரிக்கை வெற்றி பெறுவது என்பது முதலமைச்சர் போன்ற சிலரின் விருப்பு வெறுப்புக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பது அல்ல என்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கழகத்தை நடத்திச் செல்லும பொறுப்பில் உள்ள கழகக் காவலர்கள், தங்கள் சுயநலம் கருதிதான் தனிநாடு கோருகிறார்களாம். ஏதாவது ஒன்றைக் கூறிக் கொண்டு தானே மக்களிடம் நடமாட வேண்டும் என்பதற்காகவே, தனிநாடு என நமது காவலர்கள் பேசி வருகிறார்களாம். இவ்வாறு காமராசர் நமது கழகக் காவலர்களின் விடுதலைப் பணிக்கு மாசு கற்பிக்கிறார்.

நாடாளுவதற்கு அறவே அறிவு தேவை இல்லை என்ற மகத்தான உண்மையை தாமே முதலமைச்சராக இருந்து செயலளவில் மெய்ப்பித்து வரும் கனம் காமராசரிடம், இதைத் தவிர வேறு எதைத்தான் நாம் எதிர்பார்க்க முடியும்? நரி பதுங்கிக் கிடக்கும பொந்தில் யானை தந்தத்தையா எதிர்பார்க்க முடியும்? அவ்விலையுயர்ந்த பொருளை அரிமா[illegible] தம்மைக் கருதிக் கொண்டு[illegible]குகையில் எதிர்பார்ப்பதல்லவா அறிவுடைமையாகும்?

நமது திராவிடநாடு கோரிக்கையை பிரச்சினையாகக் கொண்டு தேர்தலில் நாம் கலந்து கொண்டால், அதைக் குறித்து மக்கள் எத்தகைய தீர்ப்பளிப்பர் என்பதில் முதலமைச்சருக்கு எள்ளளவும் சந்தேகமே கிடையாதாம்.

அதாவது, தனிநாடு வேண்டாம் என்பதற்கே சாதகமாக மக்கள் தீர்ப்பளிப்பர் என்பது இந்த வரும்பொருள் உணர்த்தும் முதலமைச்சரின் முணுமுணுப்பு!

தேர்தலுக்குப் பின் தெரிய வேண்டிய முடிவு குறித்து, தேர்தல் நாள் தெரிவதற்கு முன்பே அறிந்து கூறும் இந்த ஆற்றலமைச்சர், அவ்வாறு கூறினதுடன் நின்றுவிடவில்லை. அவர் கூற்றில் அவருக்கே ஐயம் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, 'அங்கும் இங்குமாக சில இடங்களை கழகத்தினர் கைப்பற்றுவர்' என்று குறிப்பிட்டு பெருமூச்செறிகிறார்!

நமது அரசியல் பகைவர் கூறும் அரசியல் ஆரூடம் இது!

தேர்தலில் எத்தனை இடங்களைக் கைப்பற்றுவது என்பதல்ல இப்பொழுதுள்ள பிரச்சினை. அதுபோன்றே, தேர்தலில் பெருவாரியாக இடம் பெற்று, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, டில்லிக்குக் கட்டியம் கூறிவருவது என்பதுமல்ல திரிசிரபுர முடிவின் உள்ளடக்கம். அதுவுமல்லாது, நம்மில் சிலர் சட்டசபை உறுப்பினர்களாகி, வாழ்வின் சுமையைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதல்ல அதன் நோக்கம்!

டெல்லி ஏகாதிபத்தியத்தின் ஓரவஞ்சனையை, எதேச்சாதிகாரத்தை சட்டசபையிலிருந்து கொண்டும் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு உணர்த்தி, தாய் நாட்டு விடுதலை முயற்சியைத் தீவிரமாக்கி வெற்றி பெறுவது என்பதே, திரிசிரபுர முடிவின் முழுப்பொருள் ஆகும்.

வரப்போகும் பொதுத் தேர்தலில் நமது கழகத்திற்குக் கிடைக்கும் வெற்றியின் அளவைக் கொண்டு, திராவிடநாடு கோரிக்கையை இறுதியாக முடிவுகட்டி விடலாம் என்றும் முதலமைச்சர் சாமர்த்தியவாதம் செய்திருக்கிறார். தமது கல்லா மூளையிலேயே இவ்வளவு அற்புதமான கருத்துக்கு இடமிருக்கிறது என்றால், கூடுமானவரை நன்கு கற்றறிந்த கழகக் காவலர்களிடம் அதனினும் சிறந்த கருத்துத் தோன்றாமலா போகும்?

'கண்ணை மூடிக்கொண்டே நான் செய்வதை நீ கண்ணைத் திறந்து கொண்டே, செய்வாயா' என ஒரு எத்தன், ஒரு ஏமாளியைப் பார்த்துக் கேட்டான்.

எத்தனின் உள்ளக்கிடக்கையைத் தெரிந்து கொள்ளாது, எத்தனின் கோரிக்கைக்கு ஏமாளி ஒப்பினான்.

எத்தன், தனது கண்களை மூடிக்கொண்டு பிடிபிடியாக மண்ணை வாரி மூடிய கண்கள் மீது போட்டுக் கொண்டான்.

அதைக் கண்டிருந்த ஏமாளி, தனது அறிவின்மைக்கு வருந்தி தோல்வியை ஒப்புக் கொண்டான்; இது கதை.

இக்கதையில் வரும் எத்தனுக்குத் தம்மைப் பாவித்துக் கொண்டு, நம்மை ஏமாளியாகக் கருதிக்கொண்டு முதலமைச்சர், தேர்தலை முன்வைத்து நமக்கு அறைகூவல் விடுகிறார்.

அவர், கைதேர்ந்த எத்தனுக்குத் தம்மைக் கருதிக் கொண்டிருப்பதில் உண்மை இருக்கலாம். ஆனால், நம்மை ஏமாளியாக அவர் எண்ணுவதில் சிறிதும் பொருளில்லை என்பதை அவருக்கு அறிவித்து விடுகிறோம்.

தேர்தலில் பங்குகொள்ள இப்பொழுதுதான் முதன் முதலாக முன்வந்து இருக்கிறது. அதுவும் தேர்தல் சூது வித்தைகளில் அனுபவவாயிலாகக் கற்றுத் தேர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியை, தேர்தலில் எதிர்க்க முன்வந்து இருக்கிறது தனது தேர்தல் பித்தலாட்டப் பயிற்சி ஒரு பக்கம் இருக்க, பணமூட்டைகளின் பேராதரவுடன் அல்லவா காங்கிரஸ் கட்சி தேர்தலில் கலந்துகொள்ள இருக்கிறது?

இத்திருக்கல்யாண குணம் படைத்த காங்கிரஸ், முதன் முறையாகத் தேர்தலில் பங்கு கொள்ள முன்வந்துள்ள நமது கழகத்தைப் பார்த்து அறைகூவல் விடுவதே, அதன் இழிகுணத்தை வலியுறுத்திக் காட்டுவதாகும். தேர்தலில் பெரும்பான்மை கழகத்திற்குக் கிடைக்காவிட்டால், திராவிடநாடு கோரிக்கையை மக்கள் விரும்பவில்லை என முடிவாகி விடும் எனக் கூறுவது, முன் குறிப்பிட்டதிலும் அரசியல் மோசடியாகும்.

முதலமைச்சர் ஆரூடப்படியே 'அங்கும் இங்குமாக சில இடங்களை கழகம் கைப்பற்றி விடுமானால்' திராவிட நாட்டை விட்டு இந்திய ஏகாதிபத்தியம் தானாகவே வெளியேறிவிட முன்வர வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ள டெல்லி எதேச்சாதிகாரம் தயாராக இருக்கிறதா என்பதை, முதலமைச்சர் காமராசர் கேட்டறிந்து உரைக்க வேண்டும்.

இவ்வாறு நாம், வளர்ந்த காங்கிரஸ் கட்சியைக் கோருவதில் நியாயம் நிரம்ப இருக்கிறதா? ஆனால், நம்மைப் பார்த்து முதலமைச்சர் அறைகூவுவதில் துளியும் பொருளே கிடையாது.

எனவே, அவரது அறைகூவல், நமது கழகமும் தேர்தலில் பங்குகொள்ள வந்திருக்கிறதே என்பதை நினைத்ததால் அவருக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியின் எதிரொலியேயாகும். அதனாலேயே, அவர், கழகமும் சில இடங்களைக் கைப்பற்றி விடுமே எனக் கூறி, பெருமூச்செறிகிறார்! அப்பெருமூச்சை அவருக்கு உண்டாக்கிவிட்டதே, திரிசிரபுரம் முடிவிற்கு ஏற்பட்டுள்ள முதல் வெற்றியாகும்.

ரூ. 4 கோடியாம்!

சென்னை மாநில தேசியச் சாலைகள் முன்னேற்றத்திற்காம்!

திருச்சிராப்பள்ளி, மே 25—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை மாநிலத்தில் தேசிய சாலைகள் முன்னேற்றத்திற்காக சுமார் ரூ. 4 கோடி ஒதுக்கப்படும்; முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இப்போது தொடர்ந்து நடக்கப்படுகிற சில திட்டங்களும் இதில் அடங்கும்"

என்று, மத்தியசர்க்கார் இரயில்வே துணையமைச்சர் ஓ. வி. அழகேசன் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் தேசியச் சாலைகள் முன்னேற்றத்திற்காக முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 2,66,00,000 என்றும், அவற்றில் ரூ 1,34,00,000 முதல் திட்டக் காலத்துக்குள் செலவிடப்பட்டிருக்கிறதென்றும் அ[illegible] தெரிவித்திருக்கிறார்

கொடுக்க வேண்டிய கடன் 300 கோடியாம்

இந்தியாவுக்குப் பாகிஸ்தான் தரவேண்டியுள்ளதாம்

புதுடில்லி, மே 25—

'பிரிவினை காரணமாக பாகிஸ்தான் இந்தியப் பேரரசினருக்குத் தரவேண்டிய ரூ. 300 கோடியில் இதுவரையிலும் ஒரு செப்புக்காசு கூடத் திருப்பித் தரவில்லை' என டில்லி மக்கள் சபையில் ரெவினியூ அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

கால அளவு குறிப்பிடுவது சாத்தியமில்லையாம்!

சேது சமுத்திரத் திட்டம்பற்றி மத்திய அமைச்சர்

"சேது சமுத்திரத் திட்டம் போன்ற திட்டமொன்றில், வேலை இவ்வளவு காலத்திற்குள் ஆரம்பமாகுமென்று திட்டவட்டமாகக் கால அளவு குறிப்பிடுவது தற்போதுள்ள கட்டத்தில் சாத்தியமில்லை; ஏனெனில், அது, நிபுணர்களைக் கலந்தாலோசித்துக் [illegible]மாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்"

—என்று, மத்திய அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

நஷ்டஈடு தொகை ரூ. 450 இலட்சமாம்!

புதுடில்லி, மே 23—

தேசியமயமாக்கப்பட்டுள்ள இன்ஷியூரன்ஸ் கம்பெனி'களுக்கு வழங்கப்படவிருக்கும் நஷ்டஈடு தொகை மொத்தம் ரூ. 450 இலட்சமாக இருக்குமென மத்திய நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

மு. கருணாநிதி பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரிய மொழி, பலுசிஸ்தான் மொழி இவையெல்லாம் தமிழ் மொழியின் சிதைவுகள்தான் என்று, வரலாற்றாசிரியரில் சிலர் கருதுகின்றனர்.

"ஆப்கானிஸ்தானில் இன்றும் 'தமிழர்' என்ற ஒரு நகரம் இருக்கிறது. அங்கே வாழும் முகம்மதியர்கள் தங்கள் மொழியோடு, தமிழ் மொழியையும் கலந்து பேசுகிறார்கள்.

"முசிறி துறைமுகத்தில், கி. பி. 263-ம் ஆண்டுவரையில் ரோமானிய வீரர்கள், 1,700 பேர்வரை சிப்பாய்களாக—போர் வீரர்களாக இருந்தார்கள் என்றும் வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

"இப்படி, நாகரீகம், கலை, வாணிபம், அரசியல், மொழித் துறைகளில் உலகத்தோடு பெருமையும் பெற்றியும் மிக்கத்தொடர்பு கொண்டிருந்த உன்னதமான நாடுதான் திராவிடம்.

"இந்த நாட்டைத்தான் உலகத்திற்குத் தெரியாது என்று நாடாள வந்துள்ள அமைச்சர் பெருமக்கள் கூறுகின்றனர்!

"தமிழ் மாதாவே! உன் உதிரத்தில் உதித்தவர்கள்தான் இந்த மந்திரிகளும்! உன்னை உலகறியாது—நீ உலகறியாதவள்—உலகம் உனக்குத் தெரியாது என்று கூறுகிறார்களம்மா, அந்த உன்மத்தர்கள்? எப்போதம்மா, இதுபோன்ற துரோகிகளைத் தோற்றுவிக்க முற்பட்டாய்? வீரர்களை—தாயகப் பற்றுக்கொண்ட வீரர்களை மட்டுமே தோற்றுவிக்கும் உன் உதிரத்தில் எப்படியம்மா, உன்னை உலகறியாது என்று கூறும் காமராசர்களும், இதர மந்திரிகளும் தோன்றினார்கள்? தமிழ் மாதாவே! தமிழ் அன்னையே! உன்னை உலகமறியாது என்று கூறுகிறார்களே, உண்மையா? இது உண்மையா?"

'தமிழ் அன்னையே! உன்னை உலகு அறியாது என்கிறார்களே!'

'அந்தக் கூற்று உண்மையா?'

நாகரீகம், கலை, வாணிபம், அரசியல் மொழித் துறைகளில்...

திராவிடம் உலகத்தோடு கொண்டிருந்த தொடர்பு என்ன?

மாநில மாநாட்டில் மு. கருணாநிதி விளக்கவுரை

'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' என்ற தலைப்பில், தோழர் மு. கருணாநிதி அவர்கள், திருச்சி மாநில மாநாட்டில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஏற்கனவே வெளிவந்திருக்கிறது; மற்றப் பகுதி இங்கு தரப்படுகிறது :—

"திராவிடம் உலகத்தோடு தொடர்பு கொண்டது அல்ல; திராவிடம் உலக மக்களால் அறியப்படாதது - அறிய முடியாத ஒன்று; திராவிடம் - தமிழகம், அங்கே வழங்கும் தமிழ், உலகத்தோருக்குத் தெரியாத ஒன்று—என்று, நாட்டைக் காடாக்க வந்த அமைச்சர்கள் பேசிவருகிற இந்த நேரத்தில், திராவிடம் இந்த நாளில் அல்ல—பன்னெடுங் காலத்திற்கு முன்பே உலகத்தோடு திராவிடம் கொண்டிருந்த தொடர்புகளை நாம் பேசுவது அவசியமான ஒன்றுதான்.

"திராவிட முன்னேற்றக் கழகம் தாயக—திராவிட விடுதலைக்காகத் தனது சுதந்திர முரசை ஒலிக்கிற இந்த நேரத்தில், விடுதலை எக்காளத்தை—தனி நாடு கோரிக்கையை முழங்குகிற இந்த மாநாட்டில் கூடியிருக்கிற விடுதலை வரிசையினருக்கு—அணிவகுத்து நிற்கிற விடுதலைப் படையினருக்கு வழங்கப்படுகிற பலப்பல போர்க்கருவிகளில்—படைக்கலன்களில், 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' என்ற தலைப்பில் வழங்கப்படும் இந்தக் கருத்துக்களும் ஒன்றாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

"திராவிட நாடு என்ற பெயரே ஒத்துக்கொள்ளப்பட்ட பெயரல்ல; திராவிடர்கள் என்ற சொல்லே கிடையாது—என்று, நமது மாற்றுக் கட்சி நண்பர்கள் கூறிவருகின்ற நேரத்தில், நாம் திராவிடத்தின் உலகத் தொடர்புகளைப் பற்றி பேசுவது அவசியத்திலும் அவசியமாகும்.

"நமது நாடு—தாயகம்—தாய்நாடு—தந்தையர் நாடு—முந்தையர் நாடு—திராவிடம்! அந்த நாடு, ஒரு காலத்தில் எத்தகைய ஏற்றமும், பெருமையும் பெற்று விளங்கியது என்பதைக் கண்டுகொள்வது, தாயக விடுதலைக்காகக் கூடிநிற்கும் வீரர்களுக்கு விளக்கிச் சொல்லப் பயன்படுவதாகும்.

திராவிடம், பன்னெடுங் காலத்திற்கு முன்பே அகில உலகத்தோடும் நாகரீகம், கலை, வாணிபம், அரசியல் ஆகிய துறைகளில் தொடர்பு பல கொண்டிருந்திருக்கிறது

"வேறு எந்த ஒரு நாடும், அந்தக் காலத்தில் மற்றொரு நாட்டுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்குக் கிஞ்சிற்றும் குறைந்தது அல்ல—திராவிடம் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பு!

"இந்த உலகத்திலேயே மிகப் பழமையான நாகரீகம், பாபிலோனியா நாகரீகம்; அதற்கு அடுத்தது எகிப்திய நாகரீகம்—என்று, கூறுவார்கள்; ஆனால், இந்த பாபிலோனிய, எகிப்திய நாகரீகங்களுக்கு மூல கர்த்தாக்கள் யார்?

"உலகத்திலேயே மிகப் பழமையான பாறைகள் தமிழகப் பாறைகள்தான் என்று கூறுவார்கள். வேறு தேசங்களில் உள்ள மலைப் பாறைகள் எல்லாம் நீரில் மூழ்கியிருந்த காலம் கணக்கிடப் படக்கூடியது என்றும், ஆனால், தமிழகத்திலும், இலங்கையிலும் உள்ள மலைப் பாறைகள்தான் எப்போது நீரில் மூழ்கியிருந்தன என்று கணக்கிட முடியாத அளவு பழமையானவை என்றும கூறுவார்கள். இந்த நாட்டு மலைப் பாறைகள் மட்டுமின்றி, இந்த நாட்டு மக்கள் வளர்த்த நாகரீகமும் மிகப் பழமையானதாகும்.

"பாபிலோனியா நாகரீகம் பழமையானது என்றால், அங்கே வாழ்ந்த மக்கள் யார்? எங்கிருந்து அவர்கள் அங்கே குடியேறினார்கள்?—என்று உலகச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், பாபிலோனிய நாகரீகத்தின் பழமைக்கான காரணம் தெரியும்.

"இங்கே, தென்னிந்தியாவில்—திராவிடத்தில்—தமிழகத்திலிருந்த சோழர்கள் என்றகுலத்தவர்கள்தான் அங்கே குடியேறியவர்கள் என்று கூறப்படுகிறது.

"எப்படிக் குடியேறினார்களாம்?

"அந்த நாட்களில், வடநாட்டையும்— தென்னாட்டையும் தனித்தனியாகப் பிரித்து இடையே கடல் இருந்ததாம்; அப்போது தென்னாட்டிலிருந்த வியாபாரிகள் கடல்மூலம் படகுகள், தெப்பங்களில் ஏறிக்கொண்டுவட நாட்டிற்குச் செல்வார்களாம். அப்படிச் சென்றவர்கள்தான் வடநாட்டவருக்குக் கப்பல்கட்டும் வித்தையைக் கற்றுத் தந்தார்களாம்.

"இப்படிக் கடல்கடந்து வந்தவர்களைத்தான், 'ரிக்' வேதத்தில் 'பாணீஸ்' என்று அழைக்கப்படுகிறது. 'பாணீஸ்' என்று அழைக்கப்படும் இவர்கள், தமிழகத்தில் 'பாணர்கள்' என்று அழைக்கப்படுகிறார்கள்.

"தென்னாட்டுச் சோழர்கள் இந்தப் பாணர்களோடு சேர்ந்து கப்பலேறி, ஒரு நாட்டில் போய் குடியேறியிருக்கிறார்கள். இப்படிக் குடியேறியவர்கள், தாங்கள் குடியேறிய நாட்டிற்கு தாங்கள் சோழ தேசத்தவர் என்ற அளவில் 'சோழ தேசம்' என்றே பெயர் வைத்திருக்கின்றனர். இந்தச் 'சோழதேசம்' என்ற பெயர் நாளடைவில் 'சாலிதீயா' என்று மருவியதாயும், பின்னர், 'பாபிலோனியா' என்று திரிந்ததாயும் வரலாற்றாசிரியர் சிலர் கருதுகின்றனர்.

"இதன்படி பார்த்தால், பாபிலோனியாவில் தோன்றிய பழமையான நாகரீகத்தின் மூலகாரணமானவர்கள் 'சாலிதீயர்கள்'—சோழர்கள்—திராவிடர்கள் என்பது பெறப்படுவதாகும்.

"இதற்கு ஆதாரமாக, 'சாலிதீயா என்ற அந்த பாபிலோனியாவில், டெல்லா என்ற நகரில் காணப்படும் — கண்டுபிடிக்கப்பட்டுள்ள உருவச் சிலைகளும், இன்றையத் தமிழர்களின் தலைகளும், ஒரே தன்மையனவாக இருப்பதாக அறியப்பட்டிருப்பதைக் காட்டுகிறார்கள், வரலாற்று நிபுணர்கள்!

"சந்தனம் என்ற சொல், சேரநாட்டுக் கரை ஓரத்திற்கே உரிய சொல்லாகும், அந்தச் சொல், பாபிலோனியா இலக்கியங்களில் கையாளப்பட்டிருக்கிறது.

"எகிப்திய நாகரீகத்தின் நிலை என்ன? பாண்டிய நாட்டிலிருந்து ஒரு காலத்தே குழு ஒன்று சென்றதாம், வடக்கு நோக்கி!

"பாண்டிய நாடுதான் இந்த மீனாடு—மீனவர் நாடுதான் 'மகோஞ்ச தாரா' என்று பிரிந்தது என்றும், இந்த மீனாட்டை—மகோஞ்சதாராவைச் சேர்ந்தவர்கள்—பாண்டிய மண்டல மக்கள், அரேபியா, பெர்சியா வழியாக எகிப்து சென்று தாயகத்தின் நாகரீகத்தைப் பரப்பினார்கள் என்றும், 'டாட்ட பெர்குசன்' என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்.

"விவேகானந்தர், தனது 'மேற்றிசைப் பயணம்' என்ற புத்தகத்தில், 'எகிப்து, பாபிலோனியா நாடுகளில் வாழ்ந்தோர் நீண்ட நெடிய தோற்றமும், உயரமான வடிவமும், நீண்ட மூக்கும், அகன்ற கண்களும் உடையவர்கள் என்றும், அவர்களே ஒத்தவர்கள், இன்று தென்னிந்தியாவில் வாழ்கிறார்கள்—அவர்கள் தான் திராவிடர்கள்' என்றும், எழுதியிருக்கிறார்.

"இப்படி பாபிலோனியா, எகிப்திய நாடுகளின் நாகரீகத்தாக்களாக தமிழர்கள் தான் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. பாபிலோனியர்களும், எகிப்தியரும், பின்னால் கிரேக்கத்திற்கும், ரோமானிய நாட்டிற்கும் நாகரீகத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள்.

இது, நாம் கொண்டிருந்த நாகரீகத் தொடர்பு அந்தக் காலத்தில்! இந்தக் காலத்தில் நமது நாகரீகம் எங்கே இருக்கிறது? நாம் எப்படித் தலைகுனிந்து கிடக்கிறோம் என்பது, நாம் அறிந்ததுதான்!

"கலைத் துறையில் திராவிடம் அகில உலகத்தோடும் கொண்டிருந்த தொடர்புகள் என்ன?

"எகிப்திய நாட்டுக் கோவில்களிலும், அரண்மனைகளிலும் பல தமிழ்நாட்டு ஆண்கள், பெண்டிர் உருவங்கள் ஓவியங்களாக இருக்கின்றன என்று சரித்திராசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

"எகிப்தில், கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம் ஒன்று, தமிழ்நாட்டிலுள்ள உடுப்பி எனும் ஊருக்கு அருகில் உள்ள சிற்றூர் ஒன்றை மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது.

"உலகத்தோடு அன்றையத் தமிழகம் கொண்டிருந்த வாணிகத் தொடர்புகள் என்ன?

"உலகத்தின் பல நாடுகளுக்கு மயில் தோகை, மிளகு, யானைத் தந்தம், வாசனைத் திரவியங்கள், தங்கம், முத்து முதலிய பொருட்களை ஏற்றுமதிசெய்திருக்கிறது, தமிழகம்—அந்தக் காலத்தில்!

"கிரேக்க நாட்டில் பெஸ்கா என்றொரு சிந்தனையாளர் இருந்தார்; அவர், தன் நாட்டில் உள்ள ஆடம்பரத்தில் விருப்பம் கொண்ட பெண்கள், கிரேக்கத்தை வறுமைக் காடாக்குவதாகக் கூறிக் கண்டித்திருக்கிறார்; கிரேக்கப் பெண்கள் தமிழ்நாட்டு வாசனைத் திரவியங்களையும், முத்து, தந்தம் போன்றவற்றையும் அதிக விலை கொடுத்து வாங்குவதின் மூலம் கிரேக்கத்துப் பொருள்களை—செல்வத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுபோகச் செய்து விடுகின்றனர்; கிரேக்கம் வறண்டு விடுகிறது—என்று கூறியிருக்கின்றார்; ஆனால், அவரது இல்லத்திலேயே இருந்த 500 மேஜைகளின் கால்கள், தமிழ்நாட்டு—சேர நாட்டு யானைத் தந்தங்களால் ஆனவையாயிருந்தனவாம்.

"ரோம் நாட்டு வரலாற்று ஆசிரியர் பிளினி என்பார், ஆண்டொன்றுக்கு ½ கோடி செஸ்டர்கள்—அதாவது 10 இலட்சம் (ரோம்) தங்க நாணயங்கள் பெறுமான அளவு பொருள்களை, ரோம் நாடு தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்ததாக எழுதியிருக்கிறார்.

"கிரேக்க நாட்டு ஆசிரியரான எர்தோமசி என்பார், தென்னாட்டின் கம்பளங்களை, அவற்றின் நேர்த்தியைக் கண்டு வியந்திருக்கிறார். அவர், தமிழ்நாட்டு கம்பளங்கள், மரங்களில் காய்த்துத் தொங்குவதாக எழுதியிருக்கிறார் என்றால், அவருக்கு இங்கு இத்தனை நேர்த்தியான கம்பளங்கள் உற்பத்தியானதில் எத்தனை வியப்பு!

"அதே ஆசிரியர், தங்கத்தைக் கண்டதில்லை போலும்! 'தமிழ் நாட்டில் ஒருவகை எறும்புகள் இருக்கின்றன; அவை பூமியுள் புகுந்து, தங்கம் என்ற ஒரு பொருளை தோண்டி எடுத்து வருகின்றன' என்றும் எழுதியிருக்கிறாராம்!

"பத்துப் பாடலில், தமிழ் நாட்டுப் புலவர் ஒருவர், யவனத்திலேயிருந்து தமிழ் நாட்டுக் கடற்கரையில் வாணிபத்திற்காக வந்த மிற்கும் கப்பல்கள், குதிரைப் பற்றி போல—கொட்டடியில் வரிசையாக நின்று புல் தின்னும் குதிரைகளின் வரிசைபோல அசைந்தாடிக் கொண்டிருப்பதாக எழுதியிருக்கிறார்.

"நம்முடைய நாட்டுப் பட்டு ஒன்ற அயோத்தி நாட்டுப் பெண்ணொருத்தி கட்டிக் கொண்டிருந்தாளாம்; அந்தப் பட்டை உடுத்திக் கொண்டு தெருவிலேசென்ற அவளை, திர்வாணமாகச் சென்றாள் என்று குற்றம் சாட்டியதாம், அயோத்தி அரசாங்கம். அந்த அளவு மென்மையான பட்டுக்கள் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

"ரோம நாட்டிலிருந்த டைபீரியன் சீசர் என்ற மன்னன், தமிழ் நாட்டுப் பட்டுக்கள், ரோம நாட்டில் இறக்குமதியாகக் கூடாது என்று தடைவிதித்திருக்கிறான். அத்தனை மென்மையானவையாக அவையிருந்தனவாம்!

"இப்படிப்பட்ட பெருமைக்குரிய வாணிபத் தொடர்புகொண்டிருந்தது திராவிடம், ஒருகாலத்தில்!

"நமது அரசியல் தொடர்புகள் என்ன?

"தமிழ் நாட்டுக் கடற்கரையைச் சுற்றி வடநாட்டு மன்னர்களும், வேறு பல மன்னர்களும் தங்கள் நாவாய்களைச் செலுத்திக்கொண்டிருந்த நேரத்தில்தான், இராஜ இராஜ சோழன் வங்கக் கடல் வழி சென்று கடாரம் வென்றான் என்று வரலாறு கூறுகிறது.

"பாண்டிய நாட்டுத் தூதன் ஒருவன் ரோமானிய மன்னனான அகஸ்டஸ்சீசர் என்பவனின் அரச அவையில் வீற்றிருந்திருக்கிறான்; அந்த மன்னனின் தூதன், பாண்டிய மன்னனின் அரச அவையில் வீற்றிருக்கிறான்.

"அதேது, நிபெத்திய மொழி குடியராபுரியில் வழங்கும் மொழி,

(2-ம் பக்கம் பார்க்க)

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா

இவ்விழா மே 30-ந் தேதி முதல் சூன் 5-ந் தேதி முடிய ஏழு நாட்கள் மதுரையில் நிகழும். முதல் நாளில் நிரவான மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதால் இடவசதி கருதி, முதல் நாள் நிகழ்ச்சிகள் அனைத்தும் தல்லாகுளம் தமுக்கம் மைதானத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஆறு நாள் காலை நிகழ்ச்சிகள் மட்டும் மதுரை மீனாட்சிசுந்தரர் திருக்கோவில் ஆடி வீதியில் நிகழும். இசை, நாடக அரங்குகள் தமுக்கம் மைதானத்தில் நடைபெறும்.

இப்பொன் விழாவிற்காகத் தனித் தனி அழைப்பிதழ் அனுப்ப வசதியில்லை. இது, தமிழ் மக்கள் விழா ஆதலின், இந்த அறிவிப்பையே அழைப்பாகக் கொண்டு ஒவ்வொரு தமிழரும் விழாவில் பங்குகொள்வர் என்று எதிர்பார்க்கிறேன். வருவோர் அனைவரும் தமிழர் மரபிற்கு ஏற்றபடி விழாக்களில் பங்கு கொண்டு அமைதியாகவும், சிறப்பாகவும் நடத்தித் தர வேண்டுகிறேன். வெளி மாவட்ட வரவேற்புக் குழு உறுப்பினர்களுக்கு இடவசதி மட்டும் செய்யப்பட்டுள்ளது.

இயல், இசை, நாடகம், தமிழர் நாகரீகம், பண்பாடு, வாணிகம் முதலிய பல பொருள் பற்றிய கட்டுரைகள் பொன் விழா மலராக வெளியிடப்பட்டுள்ளன. தமிழர் வரலாறு முழுமையும் அறிந்துகொள்ள இம்மலர் பெருந் துணைபுரியும். இதன் அடக்க விலை ரூ 3. மலர்கள் சிலவே அச்சிடப்பட்டுள்ளதால், வேண்டுவோர் முன்னரே செயலாளருக்கு பணம் அனுப்பி உறுதி செய்துகொள்ளவும்.

தமிழ்ச் சங்கம், மதுரை,
1956 மே 22

பி. டி. இராசன்,
விழாக் குழுத் தலைவர்.

குறிப்பு :—இசை, நாடக நிகழ்ச்சிகளுக்கு இலவச அனுமதிச் சீட்டுகள் கேட்காதிருக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

தொழில் துறையில் தென்னாடு-நேரு

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

மட்டில் வடநாட்டிற்குச் சலுகை காட்டப்பட்டது உண்மைதான்; இதற்குக் காரணம், அவர்கள், வடநாட்டை 'கேந்திரமான பிரதேசம்' என்று கருதியதினால் தான்! அவர்கள், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் வரையில் இரயில் பாதைகளை அமைத்தனர்.

"நாம் நாடு முழுதும் இரயில் பாதைகள் அமைக்க வேண்டியதுதான்."

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தை மாநிலங்கள் சபையில் துவக்கிவைத்துப் பேசுகையில் பிரதமர் குறிப்பிட்டதாவது:—

"உறுப்பினர்கள், குறிப்பிட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி பற்றி, அடிக்கடி பேசுகின்றனர்.

"இந்தியாவின் ஒவ்வொரு பாகமும் முன்னேற வேண்டும்; அபிவிருத்தி அடைய சம சந்தர்ப்பம் தரப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் ஒப்புகிறோம்.

"சில பிரதேசங்கள் பின்தள்ளப்பட்டவை என்பதால், அவை முன்னேற நிரம்பச் சந்தர்ப்பங்கள் தரப்பட வேண்டும் என்பதையும் நாம், எல்லோரும் ஒப்புகிறோம். ஆனால், இவற்றைக் கட்டுப்படுத்துகிற அம்சங்கள் பல உள்ளன.

உதாரணமாக, ஒரு பிரதேசத்தில் நிலக்கரியும், இரும்புக் கனியும் இருந்தால் அந்தப் பிரதேசம் இதர பிரதேசங்களை விட தொழில் துறையில் வேகமாக முன்னேறிவிடும். இதில், குறைகூற ஏதுமிருக்க முடியாது."

ஐந்தாண்டுத் திட்டம் : அழகேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அது; மாறாக, இங்குள்ள மக்கள் திட்டங்களுக்கு எவ்வளவு தொகை தரமுடியும் என்பதைப் பொறுத்தது,

"அரசியல் எதிரிகள், தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகக் கூறி, சாதாரண மக்களைக் குழப்ப எண்ணலாம்; ஆனால், அவர்கள் வடநாடு சென்றால், அங்கு சில பிரதேசங்கள் இங்குள்ளதைவிட மோசமாக இருப்பதைக் காண முடியும். டெல்லி சர்க்கார், திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கும் போது, அந்தந்தப் பிரதேசங்களில் கிடைக்கும் கச்சாப் பொருள்கள், மூலப் பொருள்கள் முதலிய வசதிகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டுதான் நிதி ஒதுக்குகிறார்கள்," என்றெல்லாம் பிதற்றினாராம், அழகேசனார்!

பிலாய் ஆலைக்கு

60,000 டன் உருக்கு சாதனங்கள்

ரஷ்யாவில் தயாராகிறது

பிலாய் உருக்கு ஆலைக்கான தேவைகளைத் தயாரிக்கும் உக்ரேனிய தொழிற்சாலைகளில் ஒன்று மாலட்டாவ் தொழிற்சாலையாம். பிலாய் ஆலையின் பெரிய பெரிய உலைகளுக்கும், பட்டறைகளுக்கும் 60,000 டன் எடையுள்ள உருக்குச் சாதனங்கள் மாலட்டாவ் தொழிற்சாலை உற்பத்தி செய்து வருகிறதாம்; பாதி இவ்வாண்டுக்குள் தயாராகிவிடுமாம்.

அமெரிக்கத் தலைவர் இந்தியா வருகை?

புதுடில்லி, மே 26—

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர், சிறிது காலத்திற்குள் இந்தியாவுக்கு வருகைதரலாமெனக் கூறப்பட்டுள்ளது.

எகிப்து பிரதமர் சீனா செல்வாராம்!

சீனாவுக்கு வருகை தருமாறு சீனப் பிரதமர் சூ-என்-லாய் கோரியுள்ள அழைப்பை, எகிப்து பிரதமர் கர்னல் நாசர் ஏற்றுக் கொண்டுவிட்டாராம்!

உண்ணா நோன்பை நிறுத்தி விட்டாராம்!

கொழும்பு, மே 26—

சிங்களத்தை ஆட்சிமொழியாக்கும் மசோதா, தமிழ் மொழிக்கு அதிக சலுகைகள் தருவதாகக்கூறி உண்ணா நோன்பிருந்த இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெயசூரியா, பிரதமர் பண்டார நாயகா நேரில் சென்று கேட்டுக் கொண்டதின் பேரில், உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டார் எனத் தெரிகிறது.

மின்னல் வேக அணுகுண்டுகள்

ரஷ்யாவிடம் ஏராளமாக இருக்கிறதாம்!

அமெரிக்க விமானப் படை அதிகாரி தரும் தகவல்

வாஷிங்டன், மே 26—

"அமெரிக்காவின் முக்கிய 'முனை'களைத் தாக்குவதற்கு மின்னல் வேக அணுகுண்டுகள் அல்லது நீர்வளிக்குண்டுகளை பிரயோகிப்பதற்குப் பயன்படும் 'ஜெட்' வெடி விமானங்கள் ரஷ்யாவிடம் நிறைய உள்ளது. அமெரிக்க 'ஜெட்' சண்டை விமானங்களால் அமைத்துள்ள ஆகாய வேலிக்கும் அப்பால், காற்றலைகளைவிடக் கடுகிப் பறக்கக்கூடியவை இந்த வெடி விமானங்கள்,"

என்று, அமெரிக்க உயர்தர விமானப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

அமெரிக்கா, தற்காப்பு வகையில் நெருக்கடி நிலையில் இருக்கிறதென்றும், 1958-ல், புதுவித சண்டை விமானங்களும், தானே இயக்கும் பறக்கும் குண்டுகளும் வரும்வரை இந்நிலை நீடிக்குமென்றும், ஒரு கண்டத்திலிருந்து மற்றோர் கண்டத்தைத் தாக்கும், புதுவித பறக்கும் ஆயுதங்களை இடைமறிப்பதற்கான விதத்தைப் பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது என்றும், இனி விமானப்படை அதன் வேலையைச் செய்ய அதிக நிதி வேண்டியுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளாராம்.

2,000 தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்வர்?

பம்பாய், மே 25—

அடுத்தத் திங்கள் 2-ந்தேதியன்று அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி கூடும்போது, மகாராஷ்டிரம் முழுவதிலிருந்தும் சுமார் 2,000 தொண்டர்கள் பம்பாய் நகருடன் கூடிய சம்யுக்த மகாராஷ்டிரம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்துவர் எனத் தெரிகிறது.

டமாஸ்கஸ், மே 27—

பாகிஸ்தான் அயல்நாட்டமைச்சர் ஜபருல்லாகான் காதியானி முறைப்படி ஒரு பாலஸ்தீனப் பெண்ணை திருமணம் புரிந்து கொண்டது சட்டவிரோதமானது என்று ஒரு முகமதிய உலேமா கண்டித்துள்ளாராம்.

மந்திரி கார்மீது கல் வீச்சு

5 பேருக்குக் காயம்

அம்பாலா புத்த ஜெயந்தி விழாவில் குழப்பம்

அம்பாலா, மே 25—

இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஜகதரி என்ற ஊரில், காங்கிரசார், 'புத்த ஜெயந்தி' கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்தனர்.

அந்தக் கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக ஒரு போலீஸ்காரர் உள்ளிட்ட 5 பேருக்குக் காயம்பட்டிருக்கிறது.

கூட்டத்தில் பேசிய மந்திரி ஒருவர், 'ஜனசங்' தலைவர்கள் சிலர் புத்த ஜெயந்தி பற்றிப் பேசிய கருத்துக்களை மறுத்துப் பேசியதினாலேயே கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டதாயும், அதைத் தொடர்ந்து மந்திரி கார் மீது கல் எறியப்பட்டதாயும், மந்திரி காயம்படாது தப்பிவிட்டாலும் 5 பேருக்குக் காயம்பட்டதாயும் கூறப்படுகிறது.

கேள்வியும்—பதிலும்

கேள்வி:-சோஷலிச வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய சக்தி, இந்துமத வைதீகத்திற்கு உண்டென்று நீங்கள் கருதுகிறீர்களா?

பிரதமர் நேரு:—வைதீகத்தின் சில அம்சங்கள் தற்கால சமூக வளர்ச்சிக்கு உதவுவன அல்ல; ஆனால் இந்த அம்சங்கள், பலவீனமடைந்து வருகின்றன; வாழ்க்கையைப் பற்றிய இந்தியக் கருத்து, 'வாழு வாழவிடு' என்பதாகும்(!)—ஒருவர் தன் கருத்தை நிலைநாட்ட நினைக்கும்போதே, பிறர் கருத்தையும் மதிக்கிறது நடப்பதாகும். இந்தக் கருத்து சகிப்புத் தன்மையுடைய—எதிர்ப்பு சக்தியாயில்லாத கருத்தாகும். பிறர் முன்னேறுவதை இக் கருத்து தடுக்கவில்லை என்பதாகும்(!)"

காமராசர் தூற்றலைத்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"சென்ற தேர்தலில் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு முன்னணி அமைத்ததுபோல், தி. மு. கழகத்தின் திராவிட நாடு கோரிக்கையை அவர்கள் மறுப்பதால், கம்யூனிஸ்டுகளுடன் இப்பொழுது கூட்டணி அமைப்பது முடியாது.

கம்யூனிஸ்டுகளைப் போலவே சோஷலிஸ்டுகளும் அகில இந்திய அமைப்பு கொண்டவர்களாதலால், அவர்களுடனும் தி. மு. கழகம் கூட்டு சேருவதற்கில்லை.

"எனவே தனித்து நின்றுதான் தி. மு. கழகம் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்.

"தெற்கில் வடஇந்திய ஆதிக்கம் இருப்பதாக அவர்கள் (கழகம்) பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

"தெற்கிற்கு, அதன் தேவைகளுக்கு உதவுவதின் மூலம், யூனியன் அரசாங்கம் தமமால் இயன்றதைச் செய்துகொண்டுதான் வருகிறது.

"வட இந்தியர்களும், நாட்டின் ஐக்கியத்தை உணர்ந்து கொண்டு விட்டார்கள்."

—26-5-56ல், திருச்சி பாலக்கரையில் சுதந்திரானந்த தேசிய வாலிபர் சங்கத்தின் 20-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய முதலமைச்சர் காமராசர் மேற்கண்டவாறு பேசியுள்ளதாக, 'இந்து' இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அவ்விதழில் கண்டபடி அப்படியே மேலே தரப்பட்டிருக்கிறது.

அழகிரியின் துணைவியார் மறைவு

அஞ்சா நெஞ்சனாயிருந்து, சுயமரியாதை இயக்கச் சுடரொளியாகத் திகழ்ந்த பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் துணைவியார் எதிராசு அம்மாள் கடந்த 25-ந் தேதி மாலை இயற்கை எய்தியதுகேட்டு மிகவருந்துகிறோம். திருமதி எதிராசு, வைதீகப் பற்றுக் கொண்ட தாய் தந்தையருக்கு மகளாகப் பிறந்திருந்தும், தோழர் அழகிரியின் வாழ்க்கைத் துணைவராக ஆன பினனர், அழகிரியின் சுயமரியாதைக் கொள்கைகளை ஏற்று அவருக்கு உறுதுணைவராக இருந்தவர். அழகிரி, பொதுப் பணிக்குத் தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்துவிட்டிருந்ததால், குடும்பத்தைச் சரிவரக் கவனிக்க இயலாது போய் விட்டார் எனறாலும், திருமதி எதிராசு அவர்கள, கஷ்ட நஷ்டங்களைப் புன்னகையோடு ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்திய பெருந்தகையாவர்.

அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தினருக்கும், பிள்ளைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.

(ஆ—ர்)

★★★